செ.வெ.எண்: 292 நாள்: 08.06.2009

# தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை

2006–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் புதிய அரசு பதவி ஏற்றவுடன், முந்தைய அரசால் இயற்றப்பட்ட பணிநியமன தடை ஆணை நீக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பொதுப்பணித்துறையில் 2006–07ம் ஆண்டில் கருணை அடிப்படையிலும் மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலமும் கீழ்க்கண்ட பதவிகளுக்கு 22.10.2007 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் ( TNPSC மூலம்) | 569 |
| 2 | இளநிலை உதவியாளர் | 42 |
| 3 | தட்டச்சர் | 1 |
| 4 | ஓட்டுநர் | 9 |
| 5 | உதவி வரைவாளர் | 5 |
| 6 | தினக்கூலிப் பணியாளர்கள் பணி நிரந்தரம் | 1056 |
| | **மொத்தம்** | **1682** |

2007–2008ஆம் ஆண்டில் 02.11.2008 அன்று கருணை அடிப்படையில் 156 நபர்களுக்கு, கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணி நியமன ஆணைகள் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 63 |
| 2 | தட்டச்சர் | 2 |
| 3 | ஓட்டுநர் | 10 |
| 4 | உதவி வரைவாளர் | 16 |
| 5 | தொலைபேசி எழுத்தர் | 1 |
| 6 | தொலைபேசி உதவியாளர் | 1 |
| 7 | பாசன உதவியாளர் | 22 |
| 8 | மஸ்தூர் | 9 |
| 9 | ஹெல்பர் | 10 |
| 10 | தோட்டக்காரர் | 7 |
| 11 | துப்புரவாளர் | 12 |
| 12 | சமையல்காரர் | 1 |
| 13 | துலக்குநர் | 1 |
| 14 | ஆய்வகப் பணியாள் | 1 |
| | மொத்தம் | 156 |

மேலும், பொதுப்பணித்துறை பணியாளர்களுக்கு மே 2006 முதல் மார்ச் 2009 முடிய கீழ்க்கண்டவாறு பதவி உயர்வு ஆணைகள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் | 49 |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர்கள் | 106 |
| 3 | செயற் பொறியாளர்கள் | 166 |
| 4 | உதவி செயற் பொறியாளர்கள் | 176 |

| | | |
|---|---|---|
| 5 | பதவி மாற்றம் மூலம் உதவிப் பொறியாளர்/ இளநிலை பொறியாளர் | 194 |
| 6 | துணை இயக்குநர்/முதன்மை பணியாளர் அலுவலர் | 1 |
| 7 | ஆட்சி அலுவலர் | 64 |
| 8 | வரைவாளர்கள் (பல்வேறு மட்டத்தில்) | 179 |
| 9 | அமைச்சுப் பணியாளர்கள் (பல்வேறு மட்டத்தில்) | 700 |
| | மொத்தம் | 1635 |

தற்போது, 2008–2009ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட பதவிகளுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் 08.06.2009 அன்று சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில் வழங்கப்படுகிறது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | 244 |
| 2 | இளநிலை உதவியாளர் (தொகுப்பூதியத்தில் பணிபுரிந்தவர்கள்) | 315 |
| | மொத்தம் | 559 |

மொத்தமாகக் கணக்கிட்டால் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து மொத்தம் 2397 நபர்களுக்கு பணி நியமனமும், 1635 பணியாளர்களுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுப்பணித்துறையில் தற்போது காலியாகவுள்ள அனைத்து பதவிகளையும் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.